## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 23.05.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

**ஜப்பார்** என்ற சொல் தொடர்பாக அது அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தி கூறப்படும் போதும் அவனது அடியாருடன் தொடர்புபடுத்தி கூறப்படும்போதும் அதற்கு என்ன பொருள் உண்டு என்பதை நான் கடந்த குத்பாவில் விளக்கிக் கூறியிருந்தேன். அல்லாஹ்வின் பண்பாக இந்த சொல் வரும்போது அதற்கு சீர்திருத்துபவன் என்று பொருள். ஒவ்வொரு முஸ்லிமும் தொழுகையில் இரண்டு சஜ்தாக்களுக்கும் நடுவில் செய்யும்படி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கற்றுத்தந்த துஆவிற்கான காரணமும் இதில் தெரிய வருகிறது.

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரண்டு சஜ்தாக்களுக்கும் இடையில் இந்த துஆவை செய்வார்கள்.

**ரப்பிக்ஃபிர்லி வர்ஹம்னி வஹ்தினி வஆஃபினி வஜ்புர்னி வர்ஸுக்னி வர்பஃனி** – என் இறைவா! என்னை மன்னிப்பாயாக! என் மீது கருணை காட்டுவாயாக! எனக்கு சுகத்தை தருவாயாக! எனது சீர்குலைந்து போன பணிகளை சரியாக்குவாயாக! எனது தகுதியை உயர்த்துவாயாக!

வஜ்புர்னி என்பதில் எனது ஆன்மீகம், பௌதீகம் ஆகியவற்றுடன் தொடர்புள்ள எல்லா வி–யங்களையும் நீ சீர்திருத்துவாயாக! மேலும் எனது எல்லா பணிகளையும் நீயே சரியாக்குவாயாக! என்றே நாம் துஆ செய்கின்றோம். நிச்சயமாக இந்த துஆவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தந்திருப்பதற்கு காரணம் அல்லாஹ்வின் இந்த ஜப்பார் என்ற பண்பை கண்முன் நிறுத்தி உங்களிடம் சீர்திருத்தம் ஏற்படுவதற்காகவும் நீங்கள் இறைவனிடம் கேட்க வேண்டும் என்பதற்காகவும் ஆகும். இறைவனை மனிதன் மறந்து விட்டதன் காரணமாக இந்த சொல் மனிதனுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும்போது அதற்கு கூறப்படும் வரம்புமீறி செயல்படுபவன், கடினத்தை மேற்கொள்பவன், கிளர்ச்சி செய்பவன் போன்ற பொருள்கள் அவனுக்கு பொருந்தாத அளவில் இப்படிப்பட்ட தீமைகளில் இருந்து தப்பிப்பதற்கும் அவன் துஆ செய்ய வேண்டும். ஏனென்றால், நபிமார்களை எதிர்ப்பவர்களே இத்தகைய தீயவர்களின் அணியில் இருப்பார்கள்.

இப்போது நான் சீர்திருத்தம் என்ற கருத்துடன் தொடர்புடைய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறங்கிய சில இல்ஹாம்களையும், இக்கருத்துடன் தொடர்புடைய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில மேற்கோள்களையும் உங்கள் முன்னால் வைக்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறங்கிய ஓர் இல்ஹாமில் **தூபூ வஸ்லிஹூ வஇலல்லாஹி தவஜ்ஜஹூ.** இந்த இல்ஹாமிற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களே தவ்பா செய்யுங்கள். குழப்பம், தீங்கு விளைவித்தல், மறுத்தல், பாவம் ஆகியவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். உங்களது நிலைமையை சீர்திருத்துங்கள். இறைவன் பக்கம் கவனம் செலுத்துங்கள் என்று மொழியாக்கம் செய்துள்ளார்கள். இந்த இல்ஹாம் அவர்களுக்கு 1883 ஆம் ஆண்டு இறங்கியது. அதாவது அவர்கள் பைஅத் வாங்குவதற்கு ஆறு வருடம் முன்பு இந்த இல்ஹாம் இறங்கியது. அந்தக் காலத்தின் நிலைமை பற்றியும் இந்த இல்ஹாம் படம்பிடித்துக் காட்டுவதுடன் உங்களது சீர்திருத்தத்திற்காக நீங்கள் இறைவன்பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கூறுகிறது.

அந்தக் காலத்திலும் மார்க்கத்தின் மீது அனுதாபம் கொண்டவர்கள் இஸ்லாத்தின் நிலைமை ஏன் இவ்வளவு சீர்குலைந்து விட்டது என்று கவலையடைந்தனர். இந்த அல்லாஹ்வின் பயில்வானாகிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நீங்கள் தூய்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் பக்கம் கவனம் செலுத்துங்கள். இறைவனது கருணை உணர்வுடன் பொங்கி எழுந்திருக்கின்றது. எந்த சீர்திருத்தவாதி பற்றியும் மஹ்தி மஸீஹ் பற்றியும் ஏற்கனவே முன்னறிவிக்கப் பட்டுள்ளதோ அவர் விரைவில் வாதம் செய்ய இருக்கின்றார். எனவே, அவர் தோன்றி விட்டால் அவரை நீங்கள் மறுக்கக் கூடாது என்ற தூதுச் செய்தியை அல்லாஹ் மக்களுக்கு வழங்கினான். இன்னும் முஸ்லிம்கள் தங்கள் நிலைமை பற்றி கவலையடைந்தவர்களாய் இருக்கின்றார்கள். எனவே, அவர்கள் இதன் பக்கம் கவனம் செலுத்தினால் இறைவனது வழிகாட்டல் அவர்களுக்கு கிடைக்கும். இன்று முஸ்லிம்கள், நிலைமை தொடர்பாகவும், பூகம்பங்கள், இயற்கை சீற்றங்கள் ஏற்படுவதைக் கண்டும் கவலையடைவதால் எந்தப் பயனும் ஏற்படாது. முஸ்லிம்களின் செயலில் ஒரு மாற்றம் ஏற்படாத வரை எந்தப் பயனும் இதனால் ஏற்படாது. ஏனென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இறைவன் வழங்கியுள்ள செய்தியில் **அல்லதீன தாபு வ அஸ்லஹு உலாயிக அதூபு இலைஹிம் வ அனத்தவ்வாபுர் ரஹீம்** – எவர்கள் தவ்பா செய்து தங்களது நிலைமைகளை சீர்திருத்திக் கொள்வார்களோ அவர்கள் பக்கம் நானும் திரும்புவேன். நான் அதிகமாக தவ்பாவை ஏற்றுக் கொள்பவனும் கருணைமிக்கவனும் ஆவேன் என்றும் கூறியுள்ளான். இது அஹ்மதிய்யத்தை எதிர்ப்பவர்கள் சிந்தனை செய்ய வேண்டிய வி-யமாகும். இது இறைவனின் வாக்குறுதியாகும். இறைவனுடன் யாரும் சண்டை போட முடியாது. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறும் ஜமாஅத்தின் முன்னேற்றமும் இந்த அஹ்மதிய்யத்தின் எதிரிகளுக்கு போதுமான சான்றாக இருக்க வேண்டும். அல்லாஹ் இவர்களின் கண்களை திறப்பானாக! இவர்கள் இப்போது இந்த எதிர்ப்பிலிருந்து விலகி இந்த மஹ்தி மஸீஹின் கைகளை வலுப்படுத்துவதற்கு முஹம்மதிய்ய உம்மத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் அல்லாஹ் தவ்ஃபீக் வழங்குவானாக! அதன் மூலம் அல்லாஹ்வின் மன்னிப்பு, கருணை ஆகியவற்றின் போர்வையின் கீழ் வந்த அவர்கள் தங்களது உலகையும், மறுமையையும் பாதுகாத்துக் கொள்பவர்களாக ஆகட்டும்.

முஹம்மதிய உம்மத்தின் நிலைமை தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எநத் அளவு கவலை இருந்தது என்றால் எல்லா நேரமும் அதற்காக அவர்கள் துஆ செய்து வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரையும் கண்ணியத்தையும் நிலைநாட்டுவதுதான் அவர்களது வாழ்க்கையின் நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகவே அல்லாஹ் அவர்களுக்கு **ரப்பி அஸ்லிஹ் உம்மத்த முஹம்மதின்** – எனது இறைவா! முஹம்மதிய உம்மத்தை சீர்திருத்துவாயாக! என்ற துஆவை இல்ஹாம் மூலமாக அவர்களுக்கு கற்றுக் கொடுத்தான். இந்த துஆவை அவர்களுக்கு கற்றுத் தந்த அல்லாஹ் நிச்சயமாக அந்த துஆ ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அதைக் கற்றுக் கொடுத்துள்ளான். எனவே, இவ்வி-யத்தில் நாம் அவநம்பிக்கையடையவில்லை. முஹம்மதிய உம்மத்திலுள்ள எல்லாரும் அல்லது அவர்களில பெரும்பாலார் இந்த மஹ்தி மஸீஹின் கொடியின்கீழ் வந்து விடுவார்கள். இன்-ா அல்லாஹ். இப்போது அந்த நேரம் அருகில் இருக்கின்றது என்பதை அதற்கான சாத்தியக்கூறுகள் மூலம் நமக்கு தெரிந்திருக்கின்றது. இன்-ா அல்லாஹ் நிச்சயமாக அது நடக்கும். ஆனால், பொதுமக்களுக்கு தவறாக வழிகாட்டுகின்ற உலமாக்களும் மார்க்கத் தலைவர்களும் தங்களை சீர்திருத்திக் கொள்ளவில்லையென்றால் அவர்கள் அல்லாஹ்வின் பிடியின்கீழ் வந்துவிடலாம். காலம் மஸீஹின் வருகைக்காக காத்திருக்கின்றது என ஒருபுறம் இவர்கள் கூறுகின்றார்கள். அதற்காக அநீதியிழைத்த நிலையில் அவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் ஒருவர் வாதம் செய்த பிறகும் அவரை இவர்களும் ஏற்றுக் கொள்ளாமல் மற்றவர்களுக்கும் இவர்கள் தவறாக

வழிகாட்டுகின்றார்கள். மற்றவர்களை தடுமாற்றமடையச் செய்கின்றார்கள். பாகிஸ்தானில் ஒரு மிகப்பெரிய ஆலிம் ஜமாஅத்தை எதிர்ப்பதிலும் இவர் முன்னேறி வருகின்றார். இவரது பெயர் டாக்டர் இஸ்ரார் அஹ்மத். அவர் ஓரிடத்தில் இவ்வாறு எழுதியுள்ளார்:

உண்மையான இஸ்லாமிய நெறிமுகைள் கடந்த 1400 வருடங்களக நிலைநாட்டப்படடு வருகிறது. அது கடந்த நான்கு நூற்றாண்டிற்கு முன்னர் மார்க்கத்தைப் புதுப்பிக்கின்ற எல்லா பணிகளும் இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் நடந்தன என்பதற்கு சாட்சி பகர்கின்றது. இந்த காலக்கட்டத்தில் எல்லா பெரும் முஜத்தித்மார்களும் இந்த பகுதியில்தான் பிறந்திருக்கின்றார்கள். இதிலிருந்து இறைவனது நாட்டத்திற்கும் ஞானத்திற்கும் ஏற்ப ஒரு நீண்ட இறைவனது திட்டம் இந்த பகுதியுடன் தொடர்புடையதாக இருக்கின்றது என்பது தெளிவாகிறது.

இவர் வி-யத்தை திறந்து பேசவில்லை என்றாலும் இவரது இந்த கூற்றிலிருந்தும் இவரது பார்வையிலும் காத்தமுல் குலஃபாவும் வாக்களிக்கப்பட்ட மஸீஹாகவும் இருப்பவர் இந்த பகுதியில தோன்றுவதற்கான அறிகுறிகள் உள்ளன என்பது தெளிவாக நிரூபணமாகி இருக்கின்றது. அல்லாஹ்வின் நாட்டத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்ப வாதம் செய்கின்ற ஒருவர் வாதம் செய்த சமயத்தில் விண்ணிலும் மண்ணிலுமுள்ள அடையாளங்கள் அவருக்கு ஆதரவாக இருந்ததை அவர்கள் பார்க்காமல் கண்களை மூடியவாறு அவரை எதிர்ப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

உண்மையில் உலக வி-யங்கள் இவர்களது கண்களில் திரையிட்டுள்ளது. வெளிப்படையில் இவர்கள் ஆலிமாக இருந்தாலும் இறைவனது சைகையை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவற்றை பார்த்த பிறகும் இவர்கள் மறுக்கின்றார்கள். தங்கள் கண்களிலிருந்தும் இவர்கள் திரையை அகற்ற விரும்பவில்லை. இவர்கள் செவிடர்களாவும், ஊமையர்களாகவும், குருடர்களாகவும் இருக்கின்றார்கள். இவர்களிடமுள்ள அறிவு இவர்களை அறிவின் மினாராவாக ஆக்குவதற்குப் பகரமாக வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை எதிர்த்ததன் காரணமாக இவர்கள் மிகவும் கெட்ட படைப்பினங்களாக ஆகி விட்டார்கள். இவர்களது உள்ளம் தூய்மையாக இருந்தால், முஹம்மதிய உம்மத் தொடர்பான உண்மையின் வேதனை இவர்களுக்கு இருந்தால் இவர்கள் முழுமையின் மனத்தூய்மையுடன் அல்லாஹ்விடம் துஆ கேட்க வேண்டும். அவனிடமிருந்து இவ்வி-யத்தில் வழிகாட்டலைப் பெற அவனிடம் துஆ செய்ய வேண்டும். அவ்வாறில்லையென்றால் இவர்களும் வழி தவறிச் செல்வதுடன் தம்மைப் பின்பற்றுபவர்களையும் வழி தவறச் செய்து விடுவார்கள். இவர்களை சீர்திருத்த இனி எந்த மஸிஹும் வரமாட்டார். இந்த கவலைகளிலிருந்து இவர்களுக்கு இரட்சிப்பை வழங்க இனி எவரும் வரமாட்டார். அல்லாஹ் சமுதாயத்தை சீர்திருத்துவானாக. உண்மையாளர் களுக்கும் பொய்யர்களுக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை இவர்கள் அடையாளம் கண்டு கொள்ள அவன் உதவி செய்வானாக!

அல்லாஹ்வின் உதவிகள் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்களுடன் இருப்பது தெளிவாக தெரிகிறது. இதைப் பற்றி அல்லாஹ் முதலிலேயே அவர்களுக்கு கூறிவிட்டான். அவர்களது வெற்றி தொடர்பாக முதலிலேயே அவன் அவர்களுக்கு நற்செய்தி வழங்கி இருந்தான். பல முறை இவ்வாறு நற்செய்தி வழங்கியிருந்தான்.

1893 ஆம் ஆண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஒரு கனவைப் பற்றியும், தனக்கு இறங்கிய ஓர் இல்ஹாம் பற்றியும இவ்வாறு கூறுகின்றார்கள்:

நான் கனவில் கண்டேன். ஒரு நபர் என்னைப் பார்த்து எனது பெயர் **ஃபதஹ்** (வெற்றி) மற்றும் **ஸஃபர்** (வெற்றி) என்று கூறுகின்றார். பிறகு எனது நாவில் இந்த சொற்கள் வந்தன.

**அஸ்லஹு அல்லாஹு அம்ரின் குல்ல** – அதாவது இறைவன் எனது எல்லாப் பணிகளையும் சரியாக்கி விடுவான்.

அல்லாஹ் எனது வெற்றி பற்றிய நற்செய்தியை எனக்கு வழங்கியுள்ளான் என்ற அவர்களது வாதம், அவர்கள் தோன்றி நூறு ஆண்டுகள் கழிந்த பிறகு அல்லாஹ் அவர்கள் தோற்றுவித்த ஜமாஅத்துடன் பரிமாறும் விதமும் அந்த ஜமாஅத் முன்னேற்றத்தின் பல இலக்குகளை கடந்து செல்வதுடன் அவர்கள்தான் இந்த காலத்தில் இறைவனிடமிருந்து வந்துள்ள உண்மையான இறைதூதராக இருக்கின்றார் எனபதற்கு போதுமான சான்றுகளாக இல்லையா? அல்லாஹ உலகின் கண்களை திறப்பானாக. அது அழிவை அழைக்கக் குரல் கொடுப்பதற்குப் பகரமாக விரைவில் உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வந்துள்ள ஓர் இல்ஹாமில், **அஸ்லிஹ் பய்னி வ பய்ன இஹ்வதி** என்று கூறப்பட்டுள்ளது. இந்த இல்ஹாம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்.

இந்த இல்ஹாமின் பொருள் என் இறைவா! என்னையும் எனது சகோதரர்களையும் சீர்திருத்துவாயாக! இந்த இல்ஹாம் நம்மை எதிர்ப்பவர்களின் முடிவு தொடர்பான ஏனைய இல்ஹாம்களை நிறைவடையச் செய்யக்கூடிய ஒன்றாக உள்ளது. அப்படிப்பட்ட இல்ஹாம்களில் ஒன்றுதான், **ஹர்ரூ இலல் அஸ்கானி சுஜ்ஜதா. ரப்பனஃபிர்லனா இன்னா குன்னா ஹாதிஈன். தலல்லாஹி லகத் ஆஸருகலலாஹு அலைன வஇன் குன்னா லஹாதிஈன். லா தஸ்ரீப் அலைக்குமல் யவ்ம். யஃபிருல்லாஹு லகும் வஹுவ அர்ஹமுர் ராஹிமீன்.**

அதாவது சில எதிரிகளின் முடிவு எந்த அளவு கடுமையாக இருக்குமென்றால் அவர்கள் சில அடையாளங்களை கண்டு இறைவனுக்கு முன்னால் சஜ்தாவில் வீழ்வார்கள் எங்கள் இறைவா! எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக! நாங்கள் தவறிழைத்துள்ளோம் என்று இறைவனிடம் கூறுவார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அந்த எதிரிகள் என்னைப் பார்த்து இறைவன் மீது ஆணையாக! இறைவன் எங்கள் மீது உங்களுக்கு சிறப்பை வழங்கியுள்ளான். உம்மை அவனே தேர்ந்தெடுத்துள்ளான். நாங்கள் தவறில் இருந்தோம். அதனால் உங்களை எதிர்த்தோம் என்று கூறுவார்கள். அதற்குப் பதிலாக உங்கள் மீது இன்றைய நாளில் எவ்வித பிடியும் இருக்காது. இறைவன் உங்களை மன்னிப்பான். அவன் கருணை காட்டுபவர்கள் எல்லாரையும் விட கருணை காட்டுபவனாவான் என்று கூறப்படும்.

இவ்வாறு பெரும் பெரும் அடையாளங்கள் வெளிப்படும்போது நடைபெறும். இறுதியில் நற்பாக்கியமுள்ள மக்களின் உள்ளங்கள் திறந்து விடும். ஒரு உண்மையான மஸீஹ் இதை விட அதிகமான அடையாளங்களை காட்ட முடியுமா? இதை விட அதிகமாக அவருக்கு இறைவனின் உதவிகள் கிடைக்க முடியுமா? என்று உள்ளத்தால் அவர்கள் கூறுவார்கள். அப்போது மறைவிலிருந்தும் உண்மையை ஏற்றுக் கொள்ள அவர்களிடம் ஆற்றல் உருவாகி விடும். அவர்கள் உண்மையை ஏற்றுக் கொள்வார்கள்.

எவருக்கும் அல்லாஹ் கடுமையான அடையாளத்தை காட்டுவதற்கு முன்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களை அடையாளங்கண்டு அவர்களை ஏற்றுக் கொள்ள அவர்களுக்கு இறைவன் தவ்ஃபீக் தருவானாக! என்றே நாங்கள் துஆ செய்கின்றோம். அதன் மூலமாக உண்மையை ஏற்றுக் கொள்பவர்களாக அவர்கள் ஆக வேண்டும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். **வஸ்தப்தஹூ வ ஹாப குல்லு ஜப்பாரின் அனீத்** – அவர்கள் அல்லாஹ்விடம் உதவியைக் கேட்டார்கள். ஒவ்வொரு கடின உள்ளம் கொண்ட எதிரியும் அழிந்தனர்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:**

அல்லாஹ்விடமிருந்தும் நியமிக்கப்படுபவர்களுக்கு தொல்லைகள் தரப்படும் என்பது இறைவனின் நடைமுறையாகும். அவர்களுக்கு துன்பங்கள் கொடுக்கப்படும். கஷ்டங்களுக்கு மேல் கஷ்டங்கள் அவர்களுக்கு வந்து கொண்டே இருக்கும். இவை அவர்கள் அழிந்து போக வேண்டும் என்பதற்காக வரவில்லை. மாறாக, அவர்கள் இறைவனின் உதவியை ஈர்ப்பதற்காகவே அவை வருகின்றன. இதன் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் வாழ்ந்த வாழ்க்கையை விட மக்காவில் வாழ்ந்த வாழ்க்கை நீளமானதாக இருக்கின்றது. மக்காவில் அவர்கள் 13 ஆண்டுகள் இருந்தார்கள். மதீனாவில் 10 ஆண்டுகள் இருந்தார்கள். இந்த வசனத்தில் இந்த கருத்துதான் இருக்கின்றது. இறைவன் புறமிருந்த ஒவ்வொருவரது நிலைமையும், ஒவ்வொரு நபியின் நிலைமையும் இவ்வாறே இருக்கின்றது. துவக்க நாட்களில் அவர்களுக்கு துக்கம் கொடுக்கப் பட்டிருக்கின்றது. அவர்களை பற்றி சூழ்ச்சி செய்பவர், ஏமாற்றுக்காரர், சுயநலவாதி என்று கூறப்பட்டது. அவர்களுக்கு வைக்கப்படாத எந்த தீமையான பெயரும் இருக்கவில்லை. இறைவன் புறமிருந்து வந்த அந்த நபி எல்லாப் பேச்சுக்களையும் சகித்துக் கொண்டார். எல்லா துக்கத்தையும் தாங்கிக் கொண்டார். ஆனால் இதில் அவர்கள் வரம்பு மீறி செயல்படும்போது மக்களின் மீதுள்ள அனுதாபத்தில் இறைவனுடைய ஆற்றல் வெளிப்படுகின்றது. இவ்வாறே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எல்லா வகையிலும் துன்பங்கள் கொடுக்கப்பட்டன. எல்லா விதமான தீய பெயர்களும் அவர்களுக்கு சூட்டப்பட்டது. இறுதியில், அவர்களது இறைவன் பக்கமுள்ள கவனம் அதன் இறுதி எல்லையை அடைந்தது. இதனை **இஸ்தப்தஹூ** (அவர்கள் அல்லாஹ்விடம் உதவி கேட்டார்கள்) என்ற சொல் தெரிவிக்கின்றது. அதன் விளைவு **வ ஹாப குல்ல ஜப்பாரின் அனீத்** – எல்லா தீங்கு விளைவித்தவர்களும் தீய திட்டம் தீட்டியவர்களும் அழிந்தனர். இறைவன் பக்கமுள்ள இந்த கவனம் எதிரிகள் தமது தீங்கின் இறுதி எல்லையை எட்டும்போது ஏற்படுகின்றது. ஏனென்றால், முதலிலேயே அந்த கவனம் ஏற்பட்டிருந்தால் முதலிலேயே அழிவும் வந்திருக்கும். மக்கா வாழ்க்கையில் இறைவன் முன்பு வீழ்ந்து மன்றாடும் நிலை இருந்தது. கேட்பவர்களது பார்ப்பவர்களது உடல் நடுங்கும் அளவில் அந்த நிலைமை இருந்தது. ஆனால், இறுதியில் மதீனா வாழ்க்கையில் இறைவனது வல்லமை எவ்வாறு வெளிப்பட்டது என்பதை பாருங்கள். எதிரிகள் தீங்கு விளைவிப்பதற்கும் கொலை செய்யவும் நாடு கடத்தவும் தீய திட்டங்களை தீட்டுவதில் ஈடுபட்டு வந்தனர். இறுதியில் இப்படிப்பட்ட எதிரிகள் அனைவருமே அழிந்து விட்டனர். எஞ்சியிருந்தவர்களுக்கு தங்களது தவறுகளை ஏற்றுக் கொண்டு மிகவும் தயவுடன் மன்னிப்புக் கேட்க வேண்டியது வந்தது.

அல்லாஹ் முஸ்லிம் உம்மத்தின் மீதும் கருணை காட்டுவானாக. இவர்களில் பெரும்பாலார் தங்களது இந்த வரலாறையும் இப்படிப்பட்ட சம்பவங்களையும் பார்த்தும் அநீதி இழைத்துக் கொண்டே செல்கின்றார்கள். முஸ்லிம்கள் இமாம் மஹ்தியை ஏற்காமல் இருப்பதும் முஸ்லிம் அல்லாதவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக இழிவாக நடந்து கொள்வதும் ஆகிய இவை எல்லாம் ஒவ்வாரு சமுதாயத்தையும் அழிவின் பக்கம் கொண்டு செல்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நான் நன்மையை நாடியவாறு இந்த வி–யங்களை கூறுகின்றேன் என்பதை இறைவன் நன்கறிவான். ஒருவர் நல்லெண்ணத்துடன் நான் கூறுபவற்றை கேட்டாலும் அல்லது தீய எண்ணத்துடன் கேட்டாலும் சரியே.

நான் கூறுவதெல்லாம் எவர் சீர்திருத்தம் செய்பவராக ஆக விரும்புகின்றாரோ அவர் முதலில் தன்னை ஒளிமயமானவராக ஆக்கிக் கொள்ள வேண்டும். தன்னை அவர் சீர்திருத்திக் கொள்ள வேண்டும்.

இன்று தங்களை சீர்திருத்தம் செய்பவர்கள் என்று தங்களைப் பற்றி கூறுபவர்கள் இதனை நினைவில் கொள்ள வேண்டும். பாருங்கள்! இந்த சூரியன் பிரகாசமாக இருக்கின்றது. ஆனால், முதலில் அது ஒளியைத் தானாக பெற்றுக் கொண்ட பிறகே பிரகாசமானது. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் போதனை செய்ய வந்தவர்கள் இந்த போதனையைத்தான் வழங்கியுள்ளார்கள். ஆனால் இன்றோ மற்றவர்களை தடியால் அடிப்பது எளிதானதாகவும் தியாகம் செய்வது கடினமானதாகவும் ஆகி விட்டது. எனவே, எவர் சமுதாயத்தை சீர்திருத்த விரும்புகின்றாரோ, சமுதாயத்தின் நன்மையை நாடுகின்றாரோ அவர் அதனை தன்னை சீர்திருத்துவதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். பழைய காலங்களில் வாழ்ந்து வந்த ரிஷிகளும், அவதார புரு-ர்களும் காடுகளுக்குச் சென்று தங்களை ஏன் சீர்திருத்திக் கொண்டார்கள்? அவர்கள் இன்றைய சொற்பொழிவாளர்களைப் போன்று தாங்கள் செயல்படாத நிலையில் வெறுமனே வாயைத் திறக்கவில்லை. இது இறைவனின் நெருக்கத்தையும் அவனது அன்பையும் பெறும் வழியாகும். எவர் உள்ளத்தில் எவ்வித தூய்மையுமில்லாமல் நாவால் மட்டும் பேசுபவராக இருக்கின்றாரோ அவரது நிலை கால்வாயில் ஓடும் தண்ணீரைப் போன்றே இருக்கும். அவர் சண்டைகளை உருவாக்கி விடுவார். எவர் இறைஞானம், இறையொளி, நற்செயல்கள் ஆகியவற்றை தன்னகத்தே கொண்ட நிலையில் பேசுவாரோ அவர் கருணை எனக் கருதப்படும் மழையைப் போன்றவராவார். தொடர்ந்து வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

எனது போதனைகளுக்கேற்ப செயல்படுங்கள். எவர் வி-த்தை அருந்தியுள்ளாரோ அவர் மற்றவர்கள் அருந்திய வி-த்திலிருந்து அவர்களை பாதுகாக்க என்ன சிகிச்சையை செய்ய முடியும்? அவ்வாறு அவர் சிகிச்சை செய்தால் தானும் இறந்து மற்றவர்களையும் அழித்து விடுவார். ஏனென்றால், வி-ம் அவர் மீது தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. அவரது புலன்கள் வேலை செய்யாமல் இருப்பதால் அதன் விளைவு நல்லதாக அமைவதற்குப் பகரமாக அது அவருக்கு இழப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. சுருக்கமாக, எந்த அளவு பிரிவினைகள் வளர்ச்சியடைந்து கொண்டே இருக்குமோ அதற்கான காரணமாக தங்களது நாவை கடுமையாக பயன்படுத்த கற்றுக்கொண்ட மக்களே இருக்கின்றார்கள்.

**பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனது பார்வையில் தூய்மையடைவதற்கான சிறந்த வழி மனிதன் எந்த வகையிலும் எந்த விதத்திலும் கர்வமும் அகங்காரமும் தற்பெருமையும் கொள்ளாமலிருப்பதேயாகும். இதை விட தூய்மையடைவதற்கான சிறந்த வழி வேறு எதுவும் இல்லை. அறிவு, குடும்பம், செல்வம் ஆகிய எவ்வகையிலும் மனிதனிடம் கர்வம் இருக்கக் கூடாது. இறைவன் எவர்களுக்கு கண்களை வழங்குகின்றாரோ அவர் இந்த இருள்களிலிருந்து இரட்சிப்பை வழங்குகின்ற ஒவ்வொரு ஒளியும் விண்ணிலிருந்துதான் வருகின்றது என்பதை கண்டு கொள்வார். மனிதன் எல்லா சமயங்களிலும் விண்ணிலிருந்து கிடைக்கின்ற ஒளிக்கு தேவையுடையவனாக இருக்கின்றான். விண்ணிலிருந்து வருகின்ற சூரிய ஒளி வராவிட்டால் கண்கள் எதையும் காண முடியாது. இவ்வாறே எல்லா விதமான இருள்களையும் அகற்றி அதற்குப் பகரமாக தூய்மை மற்றும் இறையச்சத்தின் ஒளியை உருவாக்குகின்ற அகத்தின் ஒளியும் விண்ணிலிருந்தே வருகின்றது. மனிதனது தக்வாவும், ஈமானும், இறைவணக்கமும், தூய்மை ஆகிய எல்லாமே விண்ணிலிருந்துதான் வருகின்றது என்பதை நான் உண்மையாகவே உங்களுக்கு கூறிக் கொள்கிறேன். மேலும் இவை எல்லாமே அல்லாஹ்வின் அருளைச் சார்ந்தே இருக்கின்றது. அவன் விரும்பினால் இவற்றை நிலைநிறுத்துவான். அவன் விரும்பினால் இவற்றை

அகற்றி விடுவான். மனிதன் தனது நஃப்ஸை தன்னிடமிருந்து பறிக்கப்பட்ட ஒன்றாகவும் ஒன்றுமே இல்லாததாகவும் கருதுவதற்குதான் உண்மையான இறைஞானம் என்று பெயர். இறைவனின் முன்பு வீழ்ந்து தாழ்மையுடன் இறைவனது அருளை அவன் கேட்க வேண்டும். மன இச்சைகளை எரிக்கின்ற இறைஞானத்தின் ஒளியைக் கேட்க வேண்டும். அது அவனுக்குள்ளே நன்மைகளை செய்வதற்கான ஆற்றலையும் வெப்பத்தையும் ஏற்படுத்துகின்றது. பிறகு அவனது அருள்களிலிருந்து அவனுக்கு பங்கு கிடைத்து விட்டால், ஏதாவதொரு சமயத்தில் அவனது உள்ளத்திற்கு திருப்தியும் ஆறுதலும் கிடைத்து விட்டால் அதனால் அவர் கர்வமும் பெருமையும் கொள்ளக் கூடாது. மாறாக பணிவிலும் தாழ்மையிலும் அவர் இன்னும் முன்னேற வேண்டும். ஏனென்றால், எந்த அளவு அவர் தன்னை ஒன்றுமற்றவராக கருதுவாரோ அதே அளவு இறைவன் தரப்பிலிருந்து ஒளிகளும் திருப்தியளிக்கும் நிலைமையும் இறங்கும். அது அவனுக்கு ஒளியையும் ஆற்றலையும் வழங்கும். மனிதன் இந்த கொள்கையில் நிலைத்திருந்தால் அவனது நல்லொழுக்க நிலையும் சீராகி விடும். உலகில் தன்னை ஒரு பொருட்டாகவே கருதுவதும்கூட தற்பெருமையாகும். இதன் காரணமாக மனிதன் மற்றவர்களை சபிக்கின்றான். மற்றவர்களை அற்பமாக கருதுகின்றான்.

இன்றைய நாட்களில உலமாக்கள் நிலை இவ்வாறே இருக்கின்றது.

எனவே, இறைவன் கூறியுள்ள வழிகளையே சீர்திருத்தத்திற்காக நாம் பயன்படுத்த வேண்டும். தாழ்மையையும், பணிவையும் மேற்கொண்டு உங்களை சீர்திருத்த முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறில்லாமல் உங்களது ஆற்றல் மீது மட்டும் நம்பிக்கை வைத்து தனது அறிவு தான் அனைத்தும் என்று ஒருவர் கருதுவதாயிருந்தால் அப்படிப்பட்டவர்கள் கிளர்ச்சியாளர்களாகவும் கொடுங்கோலராகவும் தங்களை கூறிக் கொள்ளலாம். தங்களை சீர்திருத்திக் கொண்டவர் என்று கூறி அல்லாஹ்வின் ஜப்பார் என்ற இந்த பண்பிலிருந்து அருளைப் பெற முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

இறைவனது கடடளை, வழிகாட்டல் ஆகியவற்றின் அடிப்படையில் அமையும் சீர்திருத்தத்திற்கான வழிமுறைகளே நல்ல விளைவுகளைத் தரக்கூடியதாகவும் பயனளிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஒவ்வொருவரது எண்ணத்திற்கேற்ப எழுகின்ற ஆலோசனைகளால் சீர்குலைந்து போன சமுதாயங்களின் சீர்திருத்தம் ஏற்படமுடியு மென்றால் பிறகு உலகில் நபிமார்கள் தோன்ற வேண்டிய தேவை இருந்திருக்காது. முழுமையான முறையில் ஒரு நோயைப் பற்றி புரிந்து கொள்ளாத வரை முழுமையான உறுதியுடன் அதற்கான சிகிச்சை என்ன என்பதை ஒருவர் தெரிந்து கொள்ளாத வரை அந்த நோய்க்கான சிகிச்சையை ஒருவர் செய்ய முடியாது. இப்படிப்பட்ட மருத்துவர்களின் மூலமாக இஸ்லாத்தின் நிலைமையிலும் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. அவர்கள் என்ன நோய் ஏற்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொள்ளாமலேயே தங்களது எண்ணத்தில் வந்த சிகிச்சை முறைகளை தங்களது பலனை கருத்தில் கொண்டவாறு கடைபிடிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், இந்த நோயைப் பற்றியும் அதற்கான சிகிச்சை பற்றியும் இவர்கள் ஒன்றும் தெரியாமல் இருக்கின்றார்கள் என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இந்த நோக்கத்திற்காக இறைவன் யாரை அனுப்பியுள்ளானோ அவரால்தான் இவற்றைப் புரிந்து கொள்ள முடியும். அந்த நபர் நான் தான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். உள்ளங்களை சீர்திருத்துகின்ற பணியை உள்ளங்களை படைத்தவனால்தான் செய்ய முடியும். எனது சொற்களும் நாவன்மையும் சீர்திருத்தத்தை ஏற்படுத்த முடியாது.

மாறாக, இந்த சொற்களுக்குள் ஒரு ஆன்மா இருக்க வேண்டும். எனவே, எவர் திருக்குர்ஆனை படித்து விட்டு நேர்வழி விண்ணிலிருந்துதான் வருகின்றது என்பதை கூட புரியாமல் இருக்கின்றாரோ அவர் என்ன புரிந்துள்ளார்? **அலம் யஃதிகும் நஸீர்** (உங்களை எச்சரிப்பவர் எவரும் உங்களிடம் வரவில்லையா? என்ற கேள்வி கேட்கப்படும்போதுதான் உங்களுக்கு நிலைமை புரியும். உண்மையில் இறைவனை இறைவன் மூலமாகத்தான் அறிந்து கொள்ள முடியும். இந்த வழி ஒரு இமாமில்லாமல் ஒருவருக்கு கிடைக்காது. ஏனென்றால், இறைவன் புறமிருந்து அனுப்பப்படுபவர்தான் அவனது புதுப்புது அடையாளங்களை வெளிப்படுத்துபவராகவும் இறைத் தோற்றத்தை காட்டக் கூடியவராகவும் இருக்கின்றார். இதன் காரணமாகவே நபிமொழியில் **மன் லம் யஃரிப் இமாம ஸமானிஹி ஃபகத் மாத மீததில் ஜாஹிலிய்யா** – அதாவது எவர் காலத்தின் இமாமை அறிந்து கொள்ளவில்லையோ அவர் அறியாமையில் மரணிக்கின்றார் என்று வந்துள்ளது.

அல்லாஹ் உலகிற்கு இந்த இமாமை ஏற்றுக் கொள்ள தவ்ஃபீக வழங்குவானாக! அதன் மூலம் இறைவனின் எச்சரிக்கையிலிருந்தும் பலன் பெற்று இவர்கள் தப்பித்துக் கொள்ள வேண்டும். அஹ்மதியல்லாத பலரும் இந்த குத்பாவை கேட்கின்றார்கள். நல்ல தாக்கம் இதனால் ஏற்படுகிறது. பலர் கடிதமும் எழுதுகின்றார்கள். ஆனால், சமுதாயத்தின் மீதுள்ள அச்சம் காரணமாக அவர்களால் உண்மையை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. M.T.A. வின் பல நிகழ்ச்சிகளை பார்த்த பிறகு பலருக்கும் உண்மையை ஏற்றுக் கொள்வதற்கான தவ்ஃபீகை இறைவன் அவர்களுக்கு வழங்கியுள்ளான். எனவே, உலகிற்கு அஞ்சுபவர்கள் அவ்வாறு அஞ்சுவதற்கு பகரமாக காலத்தின் இமாமின் குரலை கேட்க வேண்டும். அல்லாஹ்வின் அழைப்பை கேட்க வேண்டும். அந்த அழைப்பு மஹ்தி மஸீஹின் மூலமாக அவர்களை எட்டியிருக்கின்றது. இந்த காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்கின்ற நமக்கும் உண்மையான முறையில் நம்மிடம் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்கான நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! நாம் பணிவுடன் இறைவன் முன்னால் குனிபவர்களாக இருப்போமாக! மேலும் அல்லாஹ்வின் இந்த ஒளியிருந்தும் அருளைப் பெறுபவர்களாக நாம் இருப்போமாக! அந்த ஒளி எப்போதும் நமது உள்ளங்களை ஒளிமயமானதாக வைக்கட்டும். ஆமீன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH, LONDON**
**ON 23.05.2008**

Translated by : **Maulavi M. Rafeeq Ahmad H.A**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**